இறையரசு மலர

"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" யோவான் 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

(FOR PRIVATE CIRCULATION ONLY)

Vol. 13 SEPTEMBER - 2017 No. 9

Dear Fathers, Brothers and Sisters in Christ!

Let us one again remember our Lady of Velankanni and receive her blessings and protection. May her Son heal all of us and bring us close to our God.

September again brings us the memory of the birth of Blessed Virgin Mary. It is the fulfillment of the promise made in the book of Genesis. The new Eve is born. It could also be said that the birth of Mary has become the versal of Mercy of God. St. John Paul II refers to mercy as "the most stupendous attribute of the creator and of the Redeemer". No one on earth ever experienced this so radically and intensely as did Mary most Holy.

I would like to publish the following article written by Pope Francis in the book "The Saints in Mercy" for our meditation.

When the term “maternal” was used in the Old Testament, it always referred to the visceral tenderness that God had for his creatures. But the Old Testament would never have dared say that a person could “have mercy of God.” The reversal occurred, however, with the Incarnation when the Mercy of God toward humanity was manifested in the fact that he allowed a human creature to be his Mother who was, in turn, connected to him viscerally in physical sense and “mercifully” in the proper sense.

But this would not have been possible had God not always already been, in himself, also “Son”. God could not have received this maternal mercy in this world if from all eternity the Divine Person of the Son had not existed in heaven. Thus in the Christmas icon of the Mother – who could unthinkably embrace within her arms the divine Son who has now become the son of man – the “mystery hidden for ages” was revealed: the Father, rich in mercy, sent his own Son into creation, which was made through him and in him. As Pope Francis wrote in *Misericordiae Vultus* (the papal bull proclaiming the Jubilee Year of Mercy): “Chosen to be the Mother of the Son of God, Mary, from the outset, was prepared by the love of God to be the Ark of the Covenant between God and man. She treasured divine mercy in her heart in perfect harmony with her Son Jesus”.

To call Mary, therefore, Mother of Mercy means precisely that she knows like no one else, humanly and viscerally, the mystery of the "sonship of God" and the "viscerals of the Father." Such a mystery also contains the promise, for us, to make us all "sons and daughters in the Son." At Christmas, therefore, Mary embraced all of God's Mercy within her arms, even if such mercy would be fully revealed only in the Paschal Mystery.

Here we recall the beautiful meditation of John Paul II in *Dives in Misericordia*:

*Mary also is the one who obtained mercy in a particular and exceptional way, as no other person has. At the same time, still in an exceptional way, she made possible with the sacrifice of her heart her own sharing in revealing God's mercy. This sacrifice is intimately linked with the cross of her Son, at the foot which she was to stand on Calvary. Her sacrifice is a unique sharing in the revelation of mercy, that is, a sharing in the absolute fidelity of God to His own love... that was definitively fulfilled through the cross. No one has experienced, to the same degree as the Mother of the crucified One, the mystery of the cross, the overwhelming encounter of divine transcendent justice with love: that "kiss" given by mercy to justice. No one has received into his heart, as much as Mary did, that mystery, that truly divine dimension of the redemption effected on Calvary by means of the death*

*of the Son, together with the sacrifice of her maternal heart, together with her definitive "fiat".*

But how were the two fiats, that of Christmas and that of Easter – the two experiences of mercy – linked within her? Let us contemplate her on Calvary, standing upright at the foot of the cross where they nailed her Son. The disciples had fled, and the only people who remained with her were a few faithful women in love with Jesus and John, his beloved disciple. Certainly, Mary, too, was enveloped in the same darkness that obscured the world: the horrendous torture of her Son had wounded her heart, while her soul was wounded inexplicable silence of heaven. She knew the mystery of Jesus' conception; she knew that he had the right to call God his Father; she knew that he had been promised a kingdom without end. But there, on the cross, the Son appeared to pray in vain. Jesus said: "My God, my God, why have you forsaken me?" (Mt 27:46) and Mary knew that he was reciting one of the psalms (see 22:2). She could have seen even repeated his words with him, but she trembled at the thought of the verses that followed: "Yet you are he who took me from the womb; / you kept me safe upon my mother's breast. / Upon you was I cast from my birth, / and since my mother bore me you have been my God. / Be not far from me, / for trouble is near/ and there is none to help" (Ps 22: 9-11).

Mary knew the extent to which all those words were true – each one, literally true! She was there to witness to him the miracle of her own perpetual virginity. She was the Mother who had offered her womb to God. But God, the Father, was now silent. Only a moment before shouting, "It is finished" (Jn 19: 30) and giving himself over to the Father with his last thrust of sonship, Jesus himself revealed the mystery to her: from heaven the Father gave the Son for the salvation of all, he handed him over out of love to the hands of sinners. And the Son not only freely consented, but to that he wanted his Mother on earth to also agree to that sweet and terrible exchange.

But there was, more. Mary then understood that she herself took part in that exchange: her Immaculate Conception and the grace that always filled her were fruit of the blood shed by the Son. And, for the first time, she felt with her entire being that she was truly the daughter of her Son, made by him and redeemed by him. "When Jesus saw his mother, and the disciple whom he loved standing near, he said to his mother, 'Woman, behold, your son!' Then he said to the disciple, 'Behold, your mother!" (Jn 19: 26-27). And from that moment on, Mary accepted with the passion of affection and of new birth that she would be Mother to her son, John, and to all the believers he represented. As the Catechism of the Catholic Church says, "at the foot of

the Cross…. Mary is heard as the Woman, the new Eve, the true 'Mother of all the living' (2618)". And from that time onward, the Church understood it had a Mother, and Mary knew she had innumerable children who would always invoke her: "Hail, Mother of Mercy, our life, our sweetness, and our hope."

Let us once again entrust our diocese and all of us to the Mercy of God and let our Mother preserve us in the Mercy of God.

May God bless you!

Yours in Christ Jesus,

† **Most Rev. Dr. P. Soundararju, SDB., DD.,**
Bishop of Vellore

**Bishop's Programme**

| | | | |
|---|---|---|---|
| 02 | Sat | | Trichy |
| 05 | Tue | M | Mass, Veeralur |
| 08 | Fri | M | Feast Mass, Confirmation, Ranipet |
| | | E | Feast Mass, Arakkonam |
| 09 | Sat | M | Silver Jubilee Mass, St.Mary's Convent, Vellore |
| | | E | Catholic Advocates' meeting, Vellore |
| 11 | Mon | M | CRI Meeting, Vellore |
| 12-22 | | | Goa |

24 Sun KGF

25 Mon Chennai

27 Wed Monthly Recollection, Vellore

† **Most Rev. Dr. P. Soundararju, SDB., DD.,**
Bishop of Vellore

## VICAR GENERAL'S OFFICE

### 1. Monthly Recollection

Recollection for the month of September will be on Wednesday 27 September 2017.

### 2. New Telephone Directory - 2018

New Telephone Directory for the year 2018 will be published by the Clergy Commission. Please check your phone number, name of your Parish, Institution, your personal mobile number and your personal Email ID in the present Telephone Directory – 2017. If anything is to be corrected or added, please do inform the Bishop's Secretary before end of October 2017 and help us to bring out the new Telephone Directory – 2018 in time.

(Secretaty Cell No: 9486424003)

**Rev. Msgr. I.John Robert**
Vicar General

## Poor Education Fund
## From 22.06.2017 to 16.08.2017
## STATEMENT OF RECEIPT

| S.NO | NAME OF THE SCHOOL / INSTITUTION | AMOUNT |
|---|---|---|
| 01 | Sagayamatha HSS, Chengam | 970.00 |
| 02 | St.Thomas Primary School, SIPCOT | 600.00 |
| 03 | Sneha Deepam Matric HSS, Alamelurangapuram | 7760.00 |
| 04 | St.Xavier Primary School, Christianpet | 2280.00 |
| 05 | St.Xavier High School, Christianpet | 1700.00 |
| 06 | LFC Primary School, Ranipet (Teachers) | 8450.00 |
| 07 | LFC Primary School, Ranipet (Students) | 1000.00 |
| 08 | St.Joesph Boys HSS, Susainagar (Staff) | 15660.00 |
| 09 | St.Joesph Boys HSS, Susainagar (Students) | 1150.00 |
| 10 | St.Mary's Girls HSS, Vellore (Students) | 2440.00 |
| 11 | St.Mary's Girls HSS, Vellore (Staff) | 10760.00 |
| 12 | Auxilliam College, Gandhinagar (Staff) | 10000.00 |
| 13 | Sacred Heart Matric School, Avoor | 3220.00 |
| 14 | Cluny Matric HSS, Devikapuram | 8600.00 |
| 15 | Annie Matric HSS, Thirumalpadi | 10545.00 |
| 16 | Ansolda Matric HSS, Chetpet | 2840.00 |
| 17 | Auxilium College, Gandhinagar (Students) | 3500.00 |
| 18 | Mary Immaculate Girls HSS, Tirupattur (Students) | 1786.00 |
| 19 | Mary Immaculate Girls HSS, Tirupattur (Staff) | 12402.00 |
| 20 | Mary Immaculate Primary and Nursery School Tirupattur (Students) | 588.00 |

| | | |
|---|---|---|
| 21 | St.Antonys Matric School, Pavithram | 4350.00 |
| 22 | St.Antonys Girls HSS, Pavithram | 8220.00 |
| 23 | MaryImmaculate Heart Matric HSS, Kariyandal | 5500.00 |
| 24 | St.Mary's Nursery and Primary School, Vellore (Students) | 1000.00 |
| 25 | St.Mary's Nursery and Primary School, Vellore (Staff) | 2000.00 |
| 26 | St.Gemma Matric HSS, Ranthamkoratur | 1700.00 |
| 27 | LFC Girls HSS, Ranipet (Staff) | 15900.00 |
| 28 | LFC Girls HSS, Ranipet (Students) | 2900.00 |
| 29 | Idhaya College, Pudupalayam (Staff) | 4000.00 |
| 30 | Idhaya College, Pudupalayam (Students) | 1000.00 |
| 31 | St.Mary's Primary School, Vellore (Staff) | 3050.00 |
| 32 | St.Mary's Primary School, Vellore (Students) | 750.00 |
| 33 | Carmel Matric School, Kolappalur | 1650.00 |
| 34 | St.Mary's Primary and Nursery School, Vandavasi | 1080.00 |
| 35 | Auxilium Girls HSS, Gandhi Nagar (Staff) | 12860.00 |
| 36 | Auxilium Girls HSS, Gandhi Nagar (Students) | 1750.00 |

I thank sincerely all the Principals, Headmasters, Headmistresses and children of Educational Institutions run by the Diocese and Religious congregations for their generous financial contribution towards the Poor Children Education Fund. Those who are yet to contribute to the fund may send the amount before 30.09.2017.

**Rev. Fr. A.C.Savarimuthu**

Manager – RCM Schools

## மறைப்பணி நிலையம்

### 1. மறைக்கல்வி / நன்னெறி நூல்கள்

இவ்வருடம் ஏறக்குறைய அனைத்து பள்ளிகளும் குறித்த நேரத்திற்கு விரைவாக மறைக்கல்வி / நன்னெறி நூல்களை வாங்கி வகுப்புகளை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆயர் தந்தையின் பெயரால் அப்பள்ளிகளின் தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு மேய்ப்பு பணி நிலையம் பாராட்டுகளை தெரிவிக்கின்றது. நாம் பள்ளிகளை நடத்துவதன் முதன்மை நோக்கமே நற்செய்தி அறிவிப்பும் – நல்லொழுக்க கல்வி கொடுப்பது மட்டுமே என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இருப்பினும் மறைக்கல்வி / நன்னெறி நூல்களை வாங்காத பள்ளிகளை வருத்தத்துடன் இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகிறோம்.

1. செயின்ட் ஜான் மெட்ரிகுலேஷன் பள்ளி, குடியாத்தம்.
2. ஆரோக்கியமாதா மெட்ரிகுலேஷன் பள்ளி, ஓல்டுடவுன்.

### 2. அன்பிய கருத்தரங்கு, ஆரணி பங்கு

அன்பிய கருத்தரங்கு 13.08.2017 ஞாயிறு அன்று ஆரணி பங்கில் நடைபெற்றது. திருப்பலியோடு தொடங்கிய இக்கருத்தரங்கானது உரையாடல் மற்றும் குழுவிவாதத்தோடு முடிவுற்றது. அன்பிய பணிக்குழு செயலர் தந்தை ஆரோக்கியா, ஒருங்கிணைப்பாளர் வேதியர் சாமுவேல் இக்கருத்தரங்கை வழிநடத்தினர். தொய்வு நிலையில் உள்ள அன்பியங்களை எப்படி சீர்படுத்துவது, இன்றைய நாளில் அன்பியங்கள் சந்திக்கின்ற சவால்கள், தடைகள், அவற்றை எப்படி எதிர்கொள்வது போன்றவை விரிவாக விவாதிக்கப்பட்டு செயல்திட்டங்கள் தீட்டப்பட்டன. மீண்டும் ஒருமுறை இதைபோன்ற கருத்தமர்வை வைத்துக்கொள்வது என்று உறுப்பினர்களால் முடிவு செய்யப்பட்டது.

3. ஜூலை மாதத்திற்கான மாதா டி.வி. நன்கொடைகள்

| வ.எண் | பங்குகள் | தொகை / ரூ. |
|---|---|---|
| 1. | ஜோலார்பேட்டை | 9750 |
| 2. | கோவிலூர் | 7100 |
| 3. | பள்ளிகொண்டா | 4100 |
| 4. | உதயேந்திரம் | 2000 |
| 5. | போளூர் | 700 |
| 6. | திருப்பத்தூர் | 500 |
| 7. | கொரட்டாம்பட்டு | 200 |
| 8. | பாகாயம் | 9200 |
| 9. | காட்பாடி | 5700 |
| 10. | ராணிப்பேட்டை | 4300 |
| 11. | கத்தீட்ரல் | 4200 |
| 12. | அரக்கோணம் | 8400 |
| | | 56,150 |

சந்தா நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்களது உளம்கனிந்த நன்றிகள்.

அருள்தந்தை **A.**ஆரோக்கியா
இயக்குநர், மேய்ப்புபணி நிலையம்

## மறைமாவட்ட அருள்பணி பேரவை

1. மறைமாவட்ட அருள்பணி பேரவை ஆண்டு கூட்டம்

மறைமாவட்டத்தின் மிக உயர்ந்த அமைப்பான மறைமாவட்ட அருள்பணி பேரவையின் ஆண்டுகூட்டம் 12.08.2017, சனி அன்று ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. இவ்வருள்பணி பேரவையின் உறுப்பினர்களான

பங்குபேரவையின் உபதலைவர்கள், மறைகோட்ட முதன்மை தந்தையர்கள் மற்றும் மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர் தந்தையர்கள் என 102 பேருக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. இவர்களில் பங்குப்பேரவை உபதலைவர்கள் 48 பேரும், மறைக்கோட்ட முதன்மை தந்தையர்களில் அருள்பணி. ஞானஜோதி, திருவண்ணாமலை, அருள்பணி. பன்னீர்செல்வம், வந்தவாசி அவர்களும், பணிக்குழு செயலர் தந்தையர்களில் அருள்பணி. மரியதாசன், குடும்ப நல பணிக்குழு, அருள்பணி. தங்கராஜ், பல்சமய உரையாடல், அருள்பணி. லூவாதாமஸ், விவிலியம், அருள்பணி. ஞானசேகர், இளைஞர் மற்றும் அருள்பணி. சுதர்சன், மாதா தொலைக்காட்சி, அருள்பணி. சவரிமுத்து, கல்வி பணிக்குழு, அருள்பணி. அந்தோணிசாமி, சமூக / நீதி – அமைதி பணிக்குழு, அருள்பணி. ஆரோக்கியசாமி, மறைக்கல்வி / அன்பியம் ஆகியோர் பங்கேற்றனர். நம் ஆயர் மேதகு சௌந்தரராஜு ஆண்டகை தலைமை தாங்கி வழி நடத்தினார்.

காலை 9.30 மணியளவில் உறுப்பினர்கள் தங்கள் வருகையை பதிவு செய்த பிறகு, 10.00 மணியளவில் சிறப்பு செப வழிபாட்டுடன் கூட்டம் ஆரம்பமானது. அருள்பணி பேரவையின் ஒருங்கிணைப்பாளரும், மேய்ப்பு பணி நிலைய இயக்குநருமான அருள்பணி. ஆரோக்கியசாமி அவர்கள் கூட்டத்திற்கு வந்தவர்களை வரவேற்று, அந்நாளின் நோக்கத்தையும், முக்கியத்துவத்தையும் விளக்கினார். அதன் பின்பு, மறைமாவட்டத்தின் பல்வேறு பணிக் குழுக்களின் செயலர்கள் தங்கள் பணிக்குழுக்களின் ஆண்டறிக்கையை சுருக்கமாக சமர்பித்தார்கள்.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு, ஆயர் தந்தை அவர்கள் தனது உரையை ஆற்றினார். அவ்வுரையில் நமது மறைமாவட்டத்தின் இன்றைய நிலைமையும், மறைமாவட்டம் சந்திக்கின்ற சவால்களையும், அதை எதிர்நோக்குகின்ற விதத்தையும் சுருக்கமாக பகிர்ந்து கொண்டார். பின்பு, திருஅவை இந்த ஆண்டை இளைஞர் ஆண்டாக அறிவித்ததையும், வேளாங்கண்ணியில் நடைபெற்ற தமிழக ஆயர் பேரவையின் தீர்மானங்களில் ஒன்றான "இளைஞர்களுக்கான விழிப்புணர்வு" பற்றி பேசினார். அப்போது

உறுப்பினர்களிடையே விரிவான ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டார். இளைஞர்களுக்கான விழிப்புணர்வை பங்களவிலே எப்படி நாம் மேற்கொள்ளலாம் என்பதற்கு உறுப்பினர்கள் முன்வைத்த ஒரு சில பரிந்துரைகள்.

1. கல்விதான் நம் சமூகத்தை முன்னேற்ற பாதைக்கு அழைத்துச் செல்லும் ஓர் ஆயுதம். நம் இளைஞர்கள் இன்னும் உயர்கல்வி படிப்பதற்கான விழிப்புணர்வை அவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

2. மறைமாவட்டம் முன்னெடுக்கின்ற இளைஞர்களுக்கான உயர் படிப்பு பற்றிய செய்திகளை பங்குத்தளங்களில் பல வேளைகளில் அறிவிக்கப்படுவதில்லை. பங்குத்தந்தையர்கள் இவ்விடத்தில் ஆர்வமுடன் இருக்க வேண்டும்.

3. மறைமாவட்டத்தில் பல பணிக்குழுக்கள் செயல்படுவதுபோல், உயர்படிப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தனிபணிக்குழு மறைமாவட்டத்தில் அமைக்கப்படவேண்டும்.

4. பெற்றோர்களுக்கு முதலில் இவ்வுயர் படிப்புகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

5. உள்ளாட்சி தேர்தல் நெருங்கிவரும் இவ்வேளையில் அத்தேர்தலில் போட்டியிட இப்போதிலிருந்தே நம் இளைஞர்களை தயார்படுத்த வேண்டும்.

இதைப்போன்று பல பரிந்துரைகளை உறுப்பினர்கள் முன்வைத்தார்கள். இவற்றையெல்லாம் கேட்டறிந்த ஆயர் தந்தை அவர்கள் மறைமாவட்ட வரலாற்றில் நடந்த ஒரு சில நிகழ்வுகளை சுட்டிக்காட்டினார். பன்னெடுங்காலமாக மறைமாவட்டம் பலவிதங்களில் பல உதவிகளை செய்துகொண்டுதான் வருகிறது. அவற்றில் குறிப்பாக வீடுகள் கட்ட, ஆடு – மாடுகள் வாங்க, கல்வி கற்க என்று பலநூறு பேர் பயனடைந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் இப்போது எங்கே இருக்கிறார்கள்? கல்வி உதவி

பெற்றவர் நல்ல நிலையில் வந்த பிறகு இப்போது யாருக்காவது உதவி செய்து கொண்டிருக்கிறார்களா? அவர்களெல்லாம் எங்கே? பயனடைந்தவர்களே மீண்டும் மீண்டும் உதவிகேட்டு வருகிறார்களே என்று பல வினாக்களை எழுப்பி உறுப்பினர்களை சிந்திக்க வைத்தார். உறுப்பினர்களும் பதில் மொழியாக “அந்நிலை மாற வேண்டும்; நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்பட்டு, நம் மறைமாவட்டத்தை வளர்ச்சி பாதைக்கு அழைத்து செல்வோம்” என்று உறுதிபூண்டனர்.

கூட்டத்தின் முடிவில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது அவைகள் முறையே :

1. இந்திய குடிமையியல் பணிகளான படிப்புகளுக்கான பயிற்சியை மறைமாவட்ட அளவில் நடத்துவது.

2. தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் போட்டி தேர்வுகளுக்கான குறுங்கால பயிற்சியை துறவற சபை நிறுவனங்கள் நடத்துவது.

3. மறைக்கோட்ட அளவில் இளைஞர்களுக்கான அரசியல் விழிப்புணர்வு கருத்தரங்கை நடத்துவது.

இறுதியாக மறைமாவட்ட அருள்பணி பேரவையின் செயலர் திரு. ரூபன் அவர்கள் அனைவருக்கும் நன்றி சொல்ல, பாப்பிறை பண்ணோடு கூட்டம் நிறைவுபெற்றது.

அருள்பணி **A.**ஆரோக்கியசாமி
ஒருங்கிணைப்பாளர்
மறைமாவட்ட அருள்பணி பேரவை

## VELLORE SOCIAL SERVICE SOCIETY

10.7.2017 வாணியம்பாடி பேரிடர் தற்காப்பு மற்றும் சிறார் மேம்பாடு மாலைநேர வகுப்பு வேலூர் சமூக சேவை சங்க இயக்குநர் தலைமையிலும், பங்குதந்தை அருட்பணி. பிரிட்டோ முன்னிலையிலும் ஆரம்பிக்கப்பட்டது.

13.7.2017 அன்று சோகனூரில் பேரிடர் தற்காப்பு மற்றும் சிறார் மேம்பாடு குறித்த கூட்டம் நடைபெற்றது. இதில் வேலூர் சமூக சேவை சங்க இயக்குநர் தந்தை, திட்ட மேலாளர், சோகனூர் பங்குதந்தை, பெண்கள் பணிக்குழு செயலர் அருட்சகோதரி, கோல்பிங் ஒருங்கிணைப்பாளர், பெண்கள் ஒருங்கிணைப்பாளர்கள், கோல்பிங், மகளிர், பெண்கள் பணிக்குழு உறுப்பினர்கள் என மொத்தம் 35 நபர்கள் கலந்து கொண்டனர்.

17.7.2017 வேலூர் சமூக சேவை சங்க இயக்குநர் தந்தை அவர்கள் தலைமையில் கொடையாஞ்சி பங்கில் செயல்பட்டுவரும் மகளிர் மற்றும் விவசாய கூட்டமைப்பு பிரதிநிதிகளின் கூட்டம் பங்குதந்தை முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது.

ECO DRR திட்டத்தின் தெளிவு குறித்து திட்ட மேலாளர் திரு. பேட்ரிக் அவர்கள் எடுத்துக்கூறினார்கள். ஏற்கனவே அப்பகுதியில் இயங்கிவரும் அமைப்புகளுக்கு VSSS வழியாக ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் வாழ்வாதாரத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. அதை அவர்கள் பயன்படுத்தும் முறையும் கேட்டு அறியப்பட்டது. சிறுத்தொழில் வளர்ச்சி குறித்தும் அறியப்பட்டது.

17.7.2017 குடியாத்தம் பங்கில் VSSS திட்ட மேலாளர் சுற்றுச்சூழல், சுகாதாரம், நலவாழ்வு ஆகியன குறித்தும் சிறுவர் பாராளுமன்றம் குறித்தும் மாணவ மாணவியரோடு கலந்துரையாடி அதற்கான திட்டத்தெளிவை கொடுத்தார்கள். பின்னர் திருமதி. பரிமளாதேவி அவர்கள் தலைமையில் குடியாத்தம் தீயணைப்பு துறையிலிருந்து தீ ஏற்பட்டால் அதை எவ்வாறு தடுப்பது, அணைப்பது என்று விளக்கமாக உரை நிகழ்த்தினார்.

17.7.2017 மாலைநேர வகுப்பு தொடங்குதல், பேரிடர், தற்காப்பு மற்றும் சிறார் மேம்பாடு பற்றிய துவக்க நிகழ்வு மாலை 5 மணியளவில் ஆம்பூர் கிளைப் பங்கான புத்தூரில் ஆரம்பிக்கப்பட்டது. பங்குதந்தை அவர்கள் வரவேற்புரை நல்கினார்கள். இயக்குநர் தந்தை அவர்கள் மாணவர்களுக்கு புரியும் வகையில் தொல்லை அல்லது இடர் என்றால் என்ன? அது ஏன்

ஏற்படுகிறது? சிறிய அளவில் ஏற்படும்போது நாம் எவ்வாறு சமாளிக்கிறோம். பெரிய அளவில் இடர் ஏற்பட்டால் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன? என்பது குறித்து விளக்கினார்கள். இந்த நிகழ்வில் ஊர் நாட்டாண்மை, பங்கு பேரவை தலைவர் மற்றும் செயலர் ஆகியோர் பங்கேற்றனர்.

17.7.2017 பல்லாலகுப்பம் – பேரிடர் மேலாண்மை மற்றும் சிறார் நலம், சிறார் மேம்பாடு பற்றி திட்ட மேலாளர் முன்பு இருந்த நிலை, இப்போதைய நிலை, கல்வி மற்றும் அனைத்து நிலைகளிலும் அவர்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்து கேட்டு அதற்கான விளக்கம் அளித்தார்கள். அவர்களின் மேம்பாட்டிற்காகவே குழந்தைகள் பாராளுமன்றம் ஏற்படுத்தப்பட்டது, பொறுப்பாளர்கள் தங்களையும், மற்றவர்களையும் பொறுப்புடன் பாதுகாக்க வேண்டும் என்றும் கூறினார்கள். VSSS இயக்குநர் தந்தை அவர்கள் இடர்களின் தன்மை, அது ஏற்படும்போது நம்மை தற்காத்துக் கொள்வதோடு பிறரையும் நாம் எவ்வாறு காக்க வேண்டும் என்று விளக்கினார்கள்.

18.7.2017 அன்று காரை என்னும் கிராமத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற தலைப்பில் கூட்டம் நடைபெற்றது. வேலூர் சமூக சேவை சங்க இயக்குநர் தந்தை, திட்ட மேலாளர், இராணிப்பேட்டை பங்குதந்தை, கோல்பிங் ஒருங்கிணைப்பாளர், பெண்கள் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்துக்கொண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விரிவான விளக்கங்கள் அளித்தார்கள். கோல்பிங், மகளிர், உறுப்பினர்கள் என மொத்தம் 30 நபர்கள் கலந்துகொண்டனர். வாலாஜா ஒன்றிய கூட்டமைப்பு வட்டமும் நடைபெற்றது. அவரக்கரை கிராமத்தில் சிறார் மேம்பாடு பற்றிய கூட்டம் நடைபெற்றது.

24.7.2017 அன்று சோகனூரில் உள்ள குருவராஜபேட்டையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பேரணி நடைபெற்றது. இதில் செம்பேடு முன்னாள் பஞ்சாயத்து தலைவர் திரு. பெருமாள் அவர்கள் கொடி அசைக்க

ஊர்வலம், பள்ளி குழந்தைகள், சோகனூரில் உள்ள மகளிர், கோல்பிங் அமைப்பில் உள்ள பெண்கள், அரக்கோணம், வாலாஜா கூட்டமைப்பில் உள்ள பெண்கள் ஆக மொத்தம் 250 பேர் கலந்துக்கொண்டனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுப்புற சுத்தம், தன் சுத்தம் என்பன போன்ற பதாகைகள் ஏந்திக்கொண்டு சென்றனர். மேலும் அதனை தொடர்ந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுப்புற சுகாதாரம், பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்தல் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

செய்தி தொகுப்பு

திருமதி. **P.S.**செலின் & திருமதி. **G.**பெலிசி
ஒருங்கிணைப்பாளர்
வேலூர் சமூக சேவை சங்கம்

அருட்திரு. **A.R.**அந்தோணிசாமி
இயக்குநர்,
வேலூர் சமூக சேவை சங்கம்

## TIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

4.8.2017 திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் பணியாளர்களுக்கான மாதாந்திர கூட்டம் நடைபெற்றது. சுழல்நிதி கடன்களின் வரவுகளின் கணக்குகள் சரிபார்க்கப்பட்டது. மறைமாவட்ட கத்தோலிக்க குடும்பங்களின் கணக்கெடுப்பு பணியை விரைவில் முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

19.8.2017 கீழ்பென்னாத்தூர் ஒன்றிய மக்கள் அமைப்புகளுக்கான சிறப்பு கூட்டம் வேட்டவலத்தில் நடைபெற்றது. மக்கள் அமைப்பின் ஒன்றிய அளவிலான செயல்பாடுகள் மற்றும் அவர்கள் பராமரிக்கின்ற பதிவேடுகள், கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. இக்கூட்டத்திற்கு திருச்சி டாசோஸ் சார்பில் திருமதி. மேரி நிர்மலா அவர்கள் கலந்துகொண்டு பதிவேடுகளை ஆய்வு செய்தார்கள். இக்கூட்டத்தில் திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் திட்ட அலுவலர் மற்றும் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

22.8.2017 ஆரணி ஒன்றிய மக்கள் அமைப்புகளுக்கான சிறப்பு கூட்டம் ஆரணியில் நடைபெற்றது. மக்கள் அமைப்பின் ஒன்றிய அளவிலான செயல்பாடுகள் மற்றும் அவர்கள் பராமரிக்கின்ற பதிவேடுகள், கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. இக்கூட்டத்திற்கு திட்ட அலுவலர் திரு. இன்பசேகர் அவர்கள் கலந்துகொண்டு டாசோஸ் மூலம் அளிக்கப்பட்ட கையேட்டின் படி பதிவேடுகளை ஆய்வு செய்தார்.

மேற்காணும் யூனியன் கூட்டங்களில் மக்கள் அமைப்பு உறுப்பினர்களும், திட்ட பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

செய்தி தொகுப்பு

| | |
|---|---|
| திரு. லூ.தாமஸ் இன்பசேகர் | அருட்பணி சு.மரியதாசன் |
| திட்ட அலுவலர் | இயக்குநர் |

## மறைவட்ட செய்திகள்

புனித வின்சென்ட் தே பவுல்

அரக்கோணம் தூய இதய ஆண்டவர் ஆலய புனித வின்சென்ட் தே பவுல் கிளைசபைக்கான கூட்டம் கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்றது. அப்போது மத்திய சபை தேர்தல் அதிகாரி சகோ. பெரிய நாயகம் அவர்கள் தற்காலிக பொறுப்பாளராக சகோ. திரு. சார்லஸ் அவர்களை நியமித்தார். எட்டு வாரங்கள் அவர் தலைமையில் உழைக்கும் உறுப்பினர்கள் உற்சாகமாக செயல்பட்டனர். பிறகு, சகோ. க.தங்கராஜ் அவர்கள் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். துணைத்தலைவராக சகோ. திரு. மீனாட்சி சுந்தரம், செயலாளராக சகோ. திரு. மிரின்டோ பெர்னான்டோ, பொருளாளராக சகோ. திலிப் ஆனந், துணைச் செயலாளராக சகோ. திரு. சார்லஸ், இளைஞர் பிரதிநிதியாக சகோ. ரோஜர் தேர்வு செய்யப்பட்டனர்.

கிளைச்சபை செயல்பாடுகள் : தத்துக்குடும்பம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஆன்மீக காரியங்கள் : நோயாளிகள் சந்திப்பு மற்றும் சிறைச்சாலை சந்திப்பு போன்ற மனிதாபிமான சேவைகளும் உழைக்கும் உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேரருட்தந்தை. அருளப்பன்
பங்குத்தந்தை,
தூய இதய ஆண்டவர் ஆலயம், அரக்கோணம்

## **IAS / IPS** தேர்வுக்கான அரசு இலவச பயிற்சி

**Civil Services Preliminary Exam** (முதல்நிலைத் தேர்வு) இத்தேர்வில் இரண்டு தாள்கள் உள்ளன. முதல் தாளில் இந்திய வரலாறு, புவியியல், பொருளாதாரம், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், நாட்டு நடப்புகள், உலக நடப்புகள் போன்றவற்றிலிருந்து 100 கேள்விகளுக்கு 200 மதிப்பெண்கள். இரண்டாம் தாள் **Quantitative Aptitude, Analytical Reasoning, English Comprehension** போன்றவற்றில் இருந்து 80 கேள்விகளுக்கு 200 மதிப்பெண்கள். மொத்தம் 400 மதிப்பெண்கள்.

**Information : www.upsc.gov.in / www.upsconline.nic.in**

**Civil Services Main / Interview Exam :** முதன்மைத் தேர்வானது உரைநடை **(Descriptive)** வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தம் 9 தாள்கள். ஆங்கிலம் மற்றும் ஏதேனும் ஓர் இந்திய மொழித்தாள், இவை தகுதித் தாள்களாகும். இதில் 33 சதவீதம் பெற்றால் மட்டுமே மற்ற 7 தாள்கள் திருத்தப்படும். மற்ற ஏழு தாள்கள் ஒவ்வொன்றுக்கும் 250 மதிப்பெண்கள், மொத்தம் 1750 மதிப்பெண்கள். இத்தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்றவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். நேர்க்காணல்

**Interview** தேர்வுக்கு 275 மதிப்பெண்கள். இவ்விரண்டு தேர்வுகளின் கூட்டு மதிப்பெண் 2025 மதிப்பெண்கள் ஆகும். இதில் பெரும்பாலும் 1300 மதிப்பெண்களுக்கு மேல் பெறுகிறவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

**Free Coaching by the Government of Tamilnadu :** அடுத்த ஆண்டு 2018ல் நடைபெற உள்ள **IAS / IPS** போன்ற நிர்வாகப் பணிகளுக்கான முதல் நிலை **(Preliminary)** தேர்விற்கு தமிழக அரசு மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பயிற்சியின் பெயர் | : | **Civil Service Preliminary Examination - 2018** |
| 2. | கல்வித்தகுதி | : | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக இளநிலைப் பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும். |
| 3. | தேர்ந்தெடுக்கப்படும் முறை | : | நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ / மாணவிகள் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்படுவர். |
| 4. | நுழைவுத் தேர்வு நடைபெறும் தேதி | : | 05.11.2017 |
| | இடம் | : | வேலூர் / சென்னை |
| 5. | விண்ணப்பிக்க கடைசி தேதி | : | 20.09.2017 |

**Free Coaching Contact : www.civilservicecoaching.com**

நுழைவுத்தேர்விற்கான விண்ணப்பத்தை **Online** மூலம் அனுப்பி **Hall Ticket** பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு : இலவசப் புத்தகம் வேலூர் மறைமாவட்டம் அளிக்கும்.

**Contact :**

**Fr. Dr. Lourduswamy,** Correspondent, SJS, Veppoor
E-mail : frslourdu@gmail.com
Mobile : 94873 21179

குடும்ப விழா

ஒவ்வொரு ஆண்டும் அரக்கோணம் தூய இதய ஆண்டவர் ஆலயத்தில் குடும்ப விழா பாரம்பரியமாக சிறப்பிக்கப்படுகிறது. இவ்வாண்டு திருமண வெள்ளி விழா மற்றும் பொன்விழா காணும் திருமண தம்பதியர்களுக்கு கலை நிகழ்ச்சிகளும் நினைவு பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவின் நிகழ்வுகளில் ஒன்றாக கடந்த மாதங்களில் நடைபெற்ற விவிலிய வினா விடை போட்டிகளில் கலந்துக்கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் முதல் பரிசு 14 நபர்களுக்கும், இரண்டாம் பரிசு 1 நபருக்கும், மூன்றாம் பரிசு 11 நபர்களுக்கும், ஆறுதல் பரிசு 123 நபர்களுக்கும் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது. இறுதியில் 2,500 பேர்க்கு அன்பின் விருந்து பகிரப்பட்டு அனைவரும் ஆலய வளாகத்தில் குடும்பம் குடும்பமாக அமர்ந்து உண்டு உறவாடி மகிழ்ந்தனர். எம் பங்கின் பங்குப் பேரவையினர் இந்நிகழ்வை பங்குத் தந்தையின் ஆலோசனையோடு சிறப்பாக வழிநடத்தினர்.

இவண்
அருட்தந்தை சிகாமணி
உதவி பங்குத்தந்தை, அரக்கோணம்

**Birthday**

| | |
|---|---|
| Rev. Fr. A. Jonas Philomina Doss | 01.09.1979 |
| Rev. Fr. N. Arockia Doss | 06.09.1970 |
| Rev. Fr. K. A. Rayappa | 08.09.1954 |
| Rev. Fr. A. Bernard Velanganni | 08.09.1972 |
| Rev. Fr. R. James Vincent | 10.09.1957 |
| Rev. Fr. A. Yesu Durai | 15.09.1984 |
| Rev. Fr. M. Martin | 19.09.1958 |
| Rev. Fr. S. Sagayanathan | 19.09.1973 |
| Rev. Fr. M. Thangaraj | 19.09.1974 |
| Rev. Fr. G. Mathias | 20.09.1940 |
| Rev. Fr. M. A. Arockia Raj | 20.09.1973 |
| Rev. Fr. A. Lazar Velankanni | 23.09.1981 |
| Rev. Fr. Y. Anthony Raj | 25.09.1953 |
| Rev.Fr. S. A. Gnanasekar | 25.09.1982 |
| Rev. Fr. A. Philominraj | 26.09.1932 |
| Rev. Fr. A. Roy Lazar | 28.09.1959 |
| Rev. Fr. V. Kuriakose Kariakatt | 30.09.1951 |

**Ordination Day**

| | |
|---|---|
| Rev. Fr. A. Arulsamy | 11.09.1977 |

**Intention**

Let us pray that our parishes, animated by a missionary spirit, may be places where faith is communicated and charity is seen.

## Calender

| | | |
|---|---|---|
| 03 | Sun | 22nd Ordinary Sunday |
| 05 | Tue | St. Teresa of Kolkatta, Vir, Rf |
| 08 | Fri | The Nativity of BVM, Feast |
| 09 | Sat | St. Peter Claver Mem |
| 10 | Sun | 23 rd Ordinary Sunday |
| 12 | Tue | The Most Holy Name of Mary |
| 13 | Wed | St. John Chrysosstom, Bp. Dr. Mem |
| 14 | Thu | The Exaltation of the Holy Cross, Feast |
| 15 | Fri | Our Lady of Sorrows, Mem |
| 16 | Sat | Sts. Cornelius Pp., Cyprian Bp. Mrs |
| 17 | Sun | 24 th Ordinary Sunday |
| 21 | Thu | St. Matthew, Ap., Feast |
| 24 | Sun | 25th Ordinary Sunday |
| 27 | Wed | St. Vincent de Paul, Mem |
| 29 | Fri | The Holy Archangels Michael, Gabriel and Raphael, Feast |
| 30 | Sat | St. Jerome, Mem |

## Necrology

| | |
|---|---|
| Rev. Fr. Immanuel Alves SDB | 07.09.1976 |
| Rev. Fr.G.Arockiasamy | 10.09.2013 |
| Rev. Fr. Fioro de Beneditto SDB | 11.09.1978 |
| Rev. Fr. Michael Cusini SDB | 17.09.1976 |
| Rev. Fr. Lazar SDB | 18.09.1997 |

| | |
|---|---|
| Rev. Fr. C. Kurivilla | 19.09.2001 |
| Rev. Fr. Peter Meligo | 23.09.1958 |
| Rev. Fr. A.Joseph (Senior) | 21.09.2014 |

**R.I.P**

1. In your charity kindly pray for the repose of the soul of **Mrs. Prema Velanganni** beloved Sister in law of Rev. Fr. C. Arputharaj who passed away on 08.08.2017. May her soul rest in peace.

2. In your charity kindly pray for the repose of the soul of **Mr. Susainathan** beloved father of Rev. Fr. S. Daniel who passed away on 11.08.2017. May his soul rest in peace.

3. In your charity kindly pray for the repose of the soul of **Mr. Dominic** beloved elder brother of Rev. Fr. S.A.S. Clement Rosario who passed away on 14.08.2017. May his soul rest in peace.